JAFFNA C
UNDERGRADUATE LIBRARY
JAN 24 '68

செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

இந்து சாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு.

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். பிரதி விலை: சதம் 10. தொலைபேசி: 356

புத்-எகூ] யாழ்ப்பாணம்:- பிலவங்க ஞு தை மீ ருஉ வெள்ளிக்கிழமை (19-1-1968) [இல-சுக

நாவலர்

பண்டிதமணி. சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

(முன் வளர்ச்சி — X)

அருட்பாச் சம்பவம் (iv):

கடிதம்:

இனி இராமலிங்கசுவாமிகளின் கடிதம் ஒன்றை நோக்குவோம் கடிதங்களைத் தொகுத்துப் புத்தகமாக அக் கூட்டத்தார் வெளியிட்டிருக்கின்றார்கள். அப்புத்தகத்தில் 135-ஆம் பக்கத்தில பின்வருங் கடிதம் வருகிறது.

"யார்க்காயினும் தேக ஆனி நேரிட்டால் தகனஞ்செய்யாமல் சமாதியில் வைக்கவேண்டும். இறந்தவர்கள் திரும்பவு மெழுவார்கள் என்ற முழு நம்பிக்கையுடனிருக்கவேண்டும். புருடனிறந்தால் மனைவி தாலி வாங்குதல் வேண்டாம். மனைவிஇறந்தால் புருடன் வேறு கல்யாணப் பிரயத்தனம் வேண்டாம். அன்ன விரயஞ் செய்ய வேண்டும்.

திருச்சிற்றம்பலக் கடவுள் காட்சிகொடுக்குந் தருணம் சமீபமாகவிருக்கிறது. பார்வதிபுரம் சமரச வேத சன்மார்க்கசங்க தருமசாலைக்கு உரியவர்களாகியிருந்து இறந்தவர்களை யெல்லாம் எழுப்புவார். சத்தியம்! சத்தியம்!!

இக்கடிதம் வெளிப்பட்டறிந்துகொள்ளா முன், இறந்த தகனமானவர்களையும் எழுப்புவார். இது வெளிப்பட்டறிந்த பின் தகனஞ்செய்தல் கூடாது.

என்னுடன் பழகியவர்கள் என்னை நம்பினவர்கள் விரும்பினவர்கள் அனைவரையும் எழுப்புவார். அவநம்பிக்கையுடனிருந்தாலும், சாலைக் குரியவர்களாகியிருந்தவர்களுக்கும் இந்த உபகாரம சித்திக்தும். நம்பிகக்கை யுடன் இருங்கள் பெரிய களிப்படைவீர்கள். சத்தியம்!!

பிரமோதூத ஞு பங்குனி மீ
பார்வதி புரம்,

சிதம்பரம்,
இராமலிங்கம்.

குறிப்பு:- சாலைச் சம்பந்திகள் தவிர மற்றவர்களுக்குக் காட்டொணுது. பண வுதவி தேகவுதவியோடு நம்பிக்கையுமுள்ளவர்களுக்த இது காட்டத் தடை யில்லை.

இக்கடிதம் அற்ப மாற்றத்துடன் "அவநம்பிக்கையுடனிருந்தாலும்" என்ற வசனத்தையும் அடிக் குறிப்பையுந் தவிர்த்து, 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' என்ற புத்தகத்தில் 383-ஆம் 384-ஆம் பக்கங்களில் வந்திருக்கின்றது. துணிந்து வெளியிட்டது மதிக்கத் தக்கதொரு செயல்.

'நமக்கு' அருமந்த சரீரங்கிடைத்திருக்கிறது. சிலருக்குச் செல்வங்கள் அதிகாரங்கள் வந்து வாய்க்கின்றன. அவை எவ்வாறு நமக்குக் கிடைத்தவை என்று சிந்திப்பவர்கள் நம்மவரில் எத்தனை பேர்? அவற்றை நமக்கு உதவியதன் கருத்தறியாதவழி, அவற்றை உபயோகப்படுத்தும் முறையை நாம் அறியோம் அறியாமல் விசாரியாமல் அவற்றை உபயோகிப்பது அவைதிகமாம். அஃதாவது தூய அறிவு நெறியாகிய வேத நெறியன்றாம். அவ்வாறே சிலருக்குச் சில சித்திகள் வாய்க்கின்றன. அவர்கள் அவற்றை உதவியதன் கருத்தறிந்து உபயோகியாதவழி அவைதிகமாம். அது பெருந்தீங்குபயக்கும்' என்ற கருத்துச் சாதகரும் பெருஞ் சிந்தனையாளருமான ஒரு பெரியவரின் கூற்று இது சிந்தனைக்குரியது.

ஒருவரைச் சித்தர்என்று நிரூபிப்பதிலும் சித்தரல்லர் என்று நிரூபிப்பது எளிதன்று. இராமலிங்கசுவாமி எல்லாம் வல்ல சித்தரோ அல்லரோ என்பது நமக்கு எட்டா விஷயம். சுவாமிக்கு வாக்குச் சித்தியிருந்த

தொடர்ச்சி 2-ம் பக்கம்

உ
சிவமயம்

உற்றாரை யான்வேண்டே
னூர் வேண்டேன்
பேர் வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன்
கற்பனவு மினியமையுங்
குற்றாலத் தமர்ந்துறையுங்
கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக்
கசிந்துருக வேண்டுவனே.

— மாணிக்கவாசகசுவாமிகள்.

நாவலர் நல்வாக்கு

எவ் வகைப்பட்ட பெரிய நன்றிகளைக் கொன்றவனுக்கும் உய்வுஉண்டாம்; செய்ந் நன்றியைக் கொன்றவனுக்கு உய்வு இல்லை.

—0—

தேவாரத் திருமுறை வகுப்பு

இலங்கை இந்துசமய ஆலோசனைச் சபையாதரவில் ஆசிரியர்களும் மாணவர்களும் மற்றுந் தேவாரத் திருமுறையில் பக்தியுள்ளவர்களும் தேவாரத்திருமுறைகளை மரபின்படி பண்முறையாக ஓதப் பயில்வதற்கு யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை நாவலர் மண்டபத்திலும் கரவெட்டி விக்கினேசுவரககல்லூரியிலும் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியிலும் தேவார இசைமணி பி. ஏ எஸ், இராஜேஸ்வரன் அவர்கள் வகுப்புகளை நடத்துவார்கள். எதிரே வரும் 25-1-68 -ல் ஓதுவார் அவர்கள் மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்வர் 27-உ பிற்பகல் 5-00 மணிக்கு யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை நாவலர் மண்டபத்தில் முதல் நாள் வகுப்பு ஆரம்பிக்கப்படும். ஓதுவார் அவர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து வகுப்புகளை நடத்துவார்கள் தேவாரப் பண்முறையை முறையாக ஓதுகின்றவர்கள தொகை அருகி வருமிக் காலத்தில் மக்கள் தேவாரப் பண்முறைகளை ஓதப் பயிற்சி பெறுவதற்கு இது ஒரு அரிய சந்தர்ப்பமாகும்.

ஈழத்துக் கவிஞர்களுக்குப் பரிசுகள்

உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் நடைபெற்ற கவிதைப் போட்டியில் ஈழநாட்டைச் சேர்ந்த கவிஞர்கள திரு: சி. நாகராஜன், திரு: இ. அம்பிகைபாகன், ஆகிய இருவரும் சான்றிதழ்கள் பெற்றனர். இப் போட்டியில் 1200 கவிஞர்கள பங்குபற்றினர். மூன்று பரிசுகளும் ஏழு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

சிவ மானஜ பூஜை

தோத்திரம்

[ஆசிரியர் பிரம்மஸ்ரீ க. வை. ஆத்மநாதசர்மா]

இது வடமொழியில் உள்ளது. இயற்றியவர் பெயர் கிடைக்கவில்லை. பொதுவாக எல்லோரும் எப்போதும் சொல்லிச் சிவ வழிபாடு செய்வதற்குரியது. சிறப்பாக விசேட தீட்சை பெற்று அனுதினமும் முறைப்படி உடையவர் பூஜை செய்து வருபவர்களும் நோய்காரணமாக வேனும், பிறஏதுக்களாலேனும் முறைப்படி அதனை நிறைவேற்ற முடியாமல் இடர் நோக்கும் போது இத் தோத்திரப் பாடல்களைச் சொல்லிப் பயன்பெறலாம்.

உதாரணமாகப் பூசலார் நாயனார். என்ற மெய்யன்பர் இறைவனுக்கு. முறைப்படி ஆலயம் எடுக்கப் பொருட் பேறின்றி வருந்தியவர். நினைப்பினால் ஆலயம் அமைத்து இறைவனை அதில் எழுந்தருளும்படி வேண்டுதல் செய்தார். அதே நேரத்தில் ஐபடிகள் காடவர் கோன் என்னும் மன்னனும் முறைப்படி கல்லினால் ஆலயம் அமைத்து இறைவனை அதே முகூர்த்தத்தில் அதில் தாபிக்க முனைந்தான். அப்போது மன்னனது கனவில் இறைவன் தோன்றி.

"நின்றவூர்ப் பூசல் அன்பன் நெடிது நாள் நினைந்து செய்த
கன்று நீடாலயத்து நாளை நாம் புகுவோம் நீ இங்கு
ஒன்றிய செயலை நாளை ஒழித்துப் பின் கொள்வாய்" என்று
கொன்றைவார் சடையார் தொண்டர் கோயில் கொண்டருளப் போந்தார்.

என வரும் பெரியபுராண வரலாறு சிவமானஸபூஜையின் சிறப்பைக் காட்டுகின்றது.

தமிழ் எழுத்தில் வட மொழி மூலமும், அதன் நேர் கருத்துள்ள தமிழாக்கமும் இங்கு தரப்படுகின்றன.

★

ரத்னை: கல்பித மாஸ நம் ஹிம ஜலை:
ஸ்நா நஞ்ச திவ்யாம்பரம்
நாநாரத்ந விபூஷிதம் ம்ருகமதா,
மோதாங்கிதம் சந்தநம்
ஜாதீசம்பக பில்வ பத்ர ரசிதம்
புஷ்பஞ்ச தூபந்ததா
தீபந் தேவ தயாநிதே பசுபதே
ஹ்ருத் கல்பிதம் க்ருஹ்யதாம்

(எழு சீர் விருத்தம்)

அரதனப் பீடம் பனித்த நீர் நாநம்
அழகு பட்டாடைபன் மணிகள்
விரவு நல் லாரம மான் மதம் கந்தம்
விரை மலர் சாதி சண் பகமாம்
தரமிகு வில்வம் கிளர் மணத் தூபம்
தகு மொரு தீபமும் மனத்தாற்
பரிவுடன் அமைத்தேன் ஏற்றருள் தேவே
பசுபதி யேதயா நிதியே. (1)

ஸௌவர்ணே மணிகண்ட ரத்ந கசிதே
பாத்ரே க்ருதம பாயஸம்
பக்ஷ்யம் பஞ்சவிதம் பயோததி யுதம்
ரம்பா பலம் ஸ்வாதுச
சாகாநா மயுதம் ஜலம் ருசிகரம்
கர்பூர கண்டோ ஜ்வலம்
தாம் பூலம் மநஸா மயா விரசிதம்
பக்த்யா ப்ரபோ ஸ்வீகுரு.
பொன்மணி வயிரம் பொலியுதா லத்திற்
புதிய நெய் யினியபா யசமும்
பன்னுமை வகையாம் பண்ணியங் களுஞ்சேர்
பால் தயிர் வாழையின் கனியும்
மன்னுவேர் விராவு மணங்கமழ் நீரும்
வாசகர்ப் பூரதாம் பூலம்
முன்னியே மனததிற் பத்தியாற் படைத்தேன்
முதல்வனே ஏற்றருளுகவே. (2)

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

THE HINDU ORGAN

இந்துசாதனம்

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னுமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

பிலவங்க ஞூ தை மீ ரு-உ வெள்ளிக்கிழமை [1968]

பெற்ருரும் சமயக்கல்வியும்

"சென்ற முப்பது வருட காலம் ஆசிரியனகக் கடமையாற்றி வருகின்றேன். அக்கால அளவையுள் முப்பது பெற்ருராகுதல் தங்கள் பிள்ளைகள் சமய பாடத்தை ஒழுங்காகக் கற்கின்ருர்களா, அல்லது சமய வாழ்க்கையைக் கிரமமாக நடத்தி வருகின்ருர்களாவென என்னை வினவியதில்லை! பெற்ருர் தங்கள் பிள்ளைகளை விஞ்ஞானப்பகுதியில் சேர்ப்பதிலேயே அக்கறையாயிருக்கின்ருர்கள்; விஞ்ஞானக் கல்விதான் தங்கள் பிள்ளைகளை ஈடேற்றுமென்ற தவருன அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளனர். விஞ்ஞானிகளுக்குள் தலைமைப் பீடத்தை வகுத்த அல்பேட் ஐன்ஸ்ரீன் என்னும் பெரியார் இவ்வுலகத்தை ஒரு உணர்தற்கரிய சக்தி இயக்கிக்கொண்டிருக்கின்றதெனவும் அந்தச் சக்தியின் துணையைக் கொண்டே விஞ்ஞானிகள் உலகில் தங்கள் ஆராய்ச்சிகளையும் புதுக் கொள்கைகளையும் புதுக் கருவிகளையும் கண்டு பிடிக்கின்ருர்களெனவு மியம்பினர். அங்ஙனமாகவும் நமது நாட்டில் பெற்ருர் தங்கள் பிள்ளைகளுடைய சமயக் கல்வியில ஊக்கங் கொள்ளாதிருப்பது துன்பத்துக் கிடமான செயலாகும்" என்று யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பிரதமாசிரியர் திரு க சபாரத்தினம் B. A. அவர்கள் 12-1-68 வெள்ளிக்கிழமை யிரவு ஈழத்துச் சிதம்பரம் என்றழைக்கப்படும் [illegible] சிவன் கோவிலி ங்கழந்த மணிவாசகர் சபை விரிவுரைக் கூட்டத்தில் தலைமை வகித்தபொழுது உரை வழங்கினர். அவருடைய தலைமையுரையைத் தொடர்ந்து தமிழகத் தருமையாதீன வித்துவான் 'செஞ்சொற் கொண்டல்' சொ. சிங்காரவேலன 'தேவாரமும் திருவாசகமும்' என்னும் பொருள்பற்றி ஒரு விரிவான சொற்பொழிவாற்றினர்.

சமயக் கல்வியில்லாத படிப்பினல் பிள்ளைகள் யாதாயினும் நன்மை பெறப் போவதில்லை. கல்வி கற்றபின் இக்கால மாணவர்கள் யாவருக்கும் உத்தியோகம் கிடைக்கப் போவதில்லை. நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது பேரும் வேறு தொழில்கள்தான் தேடவேண்டிய நிலையில் இருக்கின்ருர்கள். தொழில் கிடையாதவர்கள் மனவேதனையுடையவர்களாயும் வாழ்க்கையில் விரக்தியடைந்தவர்களாயும் காணப்படுவர். அவ்விதமாக அல்லற்படுகின்ற மாணவர்களுக்கு இறைவழிபாடு, கடலில் ஆழ்ந்து உயிர் விடுகின்ற ஒருவனுக்கு ஒருபுணை கிடைத்ததுபோல் உதவி புரியும். மரியாதையுடன் வாழ்க்கையை நடத்தக்கூடிய ஒரு வழியை இறைவன் அவனுக்கு அளிப்பார்.

வேதம் ஓதில் என் வேள்விகள் செய்யில் என்
நீதிநூல் பல நித்தம் பயிற்றில் என்
ஓதி அங்கம் ஒரு ஆறும் உணரில்என்
ஈசனை உள்குவார்க் கன்றி இல்லையே.

வேதங்களை ஓதினுலென்ன? யாகங்களைப் புரிந்தாலென்ன? நீதி நூல்களை நித்தமும் பயின்ருலென்ன? வேதங்களைக் கற்ருலென்ன? ஈசனைத் தம்முள்ளே தியானஞ் செய்யத் தவறினவர்களுக்கு இவற்றினுல் ஒரு பயனும் எய்தாது.

கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்ற டொழாஅ ரெனின்

மெய்யறிவினையுடைய இறைவனுடைய நன்மையையுடைய தாள்களை ஒருவன் வணங்கத் தவறுவனுயின் அவன் சகல கலைகளையும் கற்றதினுல் அவன் எய்துப் பலன் யாதுமில்லையென்பதாம்.

மலர் மிசை யேகினுன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்.

அன்பானினைபவரது உள்ளக் கமலத்தில் அவர் நினைத்த வடிவோடு விரைந்து சென்றும் மாட்சிமைப்பட்ட இறைவனுடைய அடிகளைச் சேர்கின்றவர்கள் எல்லாவுலகுக்கும் மேலாய வீட்டுலகின்கண் அழிவின்றி வாழ்வார்கள்.

இவ்வாறெல்லாம் நமது நாட்டில் அவதரித்த ஞானச்செல்வர்கள் அறிவு கூறியிருக்கக் கூடியதாக நமது நாட்டிலுள்ள மக்கள் சமயக் கல்வியை அலட்சியஞ் செய்வது வருந்தத் தக்க செயலாகும். தம் பிள்ளைகளுடைய நல்வாழ்வை விரும்புகின்ற பெற்ருர்கள் கட்டாயமாக தங்கள் பிள்ளைகளுடைய சமயக் கல்வியில் அக்கறை செலுத்த வேண்டியவர்களாவர்.

x x x

தமிழ் மகா நாடு அநுகூலமாகப் பூர்த்தியடைந்தது

"இரண்டாவது உலகத் தமிழ் மகா நாடு பலவித சிறப்புகளுடன் தமிழ் நாட்டில் நடைபெற்றது. மலேசியாவில் நடைபெற்ற முதலாவது தமிழ் மகா நாட்டிலும் பார்க்க இம் மகா நாட்டில் பங்குபற்றியவர்கள் தொகையும் பிரதிநிதிகளை அனுப்பிய நாடுகளின் எண்ணிக்கையும் இரு மடங்காகும். தமிழ் மகா நாட்டில் கலந்து கொண்ட பிற நாட்டுப் பிரதிநிதிகள் தமிழ் நாட்டு மக்களின் அன்பையும் விருந்தோம்பு தலையுங் கண்டு வியந்தார்கள். சென்னையிலுள்ள தொழில் துறை முதல்வர்கள் பண்டைக்காலத்தில் தமிழ்ப் புலவர்களை ஆதரித்த கொடை வள்ளல்களை நிகர்க்கின்ருர்கள். தமிழ் மொழியில் கல்வி கற்பதற்கு நாற்பத்திரண்டு நாடுகளிலிருந்து வந்து அறிஞர்கள் கலந்து கொண்டனர்.

பொன்சர்வகலாசாலை, ஹெல்டெல்பேர்சர்வகலாசாலை பேத்சர்வகலாசாலை, நேப்பிள்ஸ்சர்வகலாசாலை தமிழ்மொழிக்கல்வியை தத்தம் பாடத்திட்டங்களில் சேர்க்கத்தீர்மானித்துள்ளன. மற்றும் வேறு கலாசாலைகளும் தமிழ்மொழி கற்பிக்கக் கூடிய பேராசிரியர்களை அழைத்து தமிழ் மொழி கற்பிக்க விரும்புகின்றன. தமிழ் நூல்களை அனுப்பிவைக்கும் வண்ணம் இன்னும் வேறு சர்வகலாசாலைகளிலிருந்து விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன மகா நாட்டில் பல்வேறு தலைப்புகளில் அறிஞர்களுடைய கட்டுரைகள் படிக்கப்பட்டதன் நோக்கம் பிறநாட்டவர்களுடைய உள்ளங்களில் தமிழ் ஆர்வத்தை உண்டுபண்ணுவதேயாகும். மொழியியல், சரித்திரம், கலை, கலாசாரம், புதை பொருளாராய்ச்சி என்ற பொருள்களைப் பற்றி கட்டுரைகள்படிக்கப்பட்டன" இவை உலகத் தமிழ் மகாநாட்டு இணைக் காரியதரிசி வண பிதா டக்றர் சேவியர்தனிநாயகம் அவர்கள் வெளியிட்ட அறிக்கையின் சாரமாகும்.

நாவலர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தென்பது யாவரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதொன்று. கலிங்கத்துப் பரணிகாரனுக்குக் கருத்தை நினைத்தது நினைக்க முன்னமே பாட்டு வெளியே வந்து விழும். அவ்வாறே இராமலிங்க சுவாமிக்குக் கடல் மடை திறந்தது போலப் பாட்டுக்கள் வெளிவந்தன. பாட்டுக்கள் எவரையும் வசீகரிப்பவை. பாட்டுக்களின் கருத்துக்களை ஆராய்வதை நிறுத்துவோம். அவர் கருதுங் கருத்துக்கள பிரசண்ட மாருத வேகத்தில் வெளிவந்த ஆற்றலையே சிந்திப்போம். சொற்கள் ஒன்றை ஒன்று முந்தி அவருக்கு ஏவல் செய்தன இந்தச் சித்தி ஒன்றே எவரையும் வசீகரிக்கப் போதுமானது. இதற்கு மேலே எல்லை கடந்த தெய்வபக்தி அடியார் பத்தி பரவயப்படுத்தல் கடவுளையே பாடுதல் என்றிவைகளுஞ் சேர்ந்தால் எப்படியிருக்கும்!

எவரையும் வசீகரிக்கத் தக்க இவ்வாருயதொரு நிலையில் இராமலிங்க சுவாமி, மூக்கியஸ்தரான வீராசாமி முதலியாரை யுள்ளிட்டதொரு கூட்டத்தில், அக்கூட்டத்தை ஆதரிக்கு முறையிலிருந்துகொண்டு, செத்தவரை எழுப்புவதொரு கடிதத்தை வெளியிடுவாராயின், அந்தக் கூட்டம் அந்த அற்புதத்தை எத்தனை மடங்காகப் பெருக்கிக்காட்டும். அதன் விளைவு என்னகும்! அவ் விளைவு வைதிகமாகுமா! (தூய அறிவுக்கேற்றதா?) என்பதுதான் விவேகிகள் முன்னிலையிலும் நடுநிலை வாய்த்தவர்கள் முன்னிலையிலும் ஈண்டுச் சிந்தனைக்கெடுத்துக்கொள்வது.

படத்திலிருந்து விபூதி வருகிறது; குங்குமம் வருகிறது; தீர்த்தம் சிந்துகிறது; என்றதும் யாழ்ப்பாணந் திரண்டது யாரும் அறிந்தது.

'செத்தவர் எழுவார்' என்ருல், இராமலிங்க சுவாமியின் கடித புத்தகத்திற் சொல்லப்பட்ட இரண்டணா ஒரு அணு வருமானத்துக்கும் வழியில்லாத ஏழைகளாகிய படிப்புவாசனையற்ற 'பறட்டமாரிபசி' 'போத்திமொட்டயன்' போன்ற வஞ்சகமற்ற அறியாமை யிருளிற் கிடக்கின்ற சனங்கள் என்ன செய்திருப்பார்கள்? தங்களன் புக்குரியராகிய இறந்த பிள்ளைகளை புருஷனமாரை மனைவியரை உயிர்த்தெழக் காணுதற்குத் தம்மையே அர்ப்பணித்துத் தவங்கிடவார்களா? அங்கே தானே அன்னத்துக்குக் குறைவில்லையே என்பது சமாதானமாகுமா?

சனங்கள் வந்து குவிவதுகண்டு, அதனைத் தடுத்து சம்பவங்கள் உண்மையல்ல என்ற கருத்தில் சுவாமி மற்ருெரு கடிதம் விடுத்ததுண்டு அதனை வள்ளலார் கண்ட ஒருமைப் பாட்டில் 387 ஆம் 388 ஆம் பக்கங்களிற் காண்க அந்தக் கடிதத்தில் ஒரு வசனம், 'இவ்விடத்தில் அற்புதம் விளங்குவது மெய்யோ பொய்யோ இந்தக்காலமோ எந்தக்காலமோ' என்பது இந்த வசனம் இன்னுஞ் சனக்கூட்டத்தைக் கூட்டுமா? குறைக்குமா?

(வளரும்)

அணிந்துரை அரங்கம்

காரைநகர் சைவமகாசபை
பொன்விழா மலர்

மலர் ஆசிரியர்:
ஸ்ரீ க வைத்தீசுவரக் குருக்கள்

பிரசுரிப்பவர்கள்:
சைவ மகாசபை
காரைநகர்

விலை: ஈழத்தில் — ரூபா 5-00.
,, மலாயாவில் – 3 வெள்ளி

ஈழநாட்டின் வடபாகத்தில் சைவப்பற்றும் தமிழ்மொழிப் பற்றுமுள்ள மக்களைத் தன்னகத்தேகொண்டு விளங்குவது காரைநகரென்ற பழம்பதி. சைவ சமயாசாரங்களையும் சிவார்ச்சனையையும் பக்தியுடன் புரிந்துவருகின்ற சிவப்பிராமண குடிகளும், சைவக்குடும்பங்களும் அப்பதியில் இன்றும் விளங்குகின்றன. அவ்வூரின்கண் சைவ சமயத்தையும் தமிழ் மொழியையும் வளர்க்குந் தூய நோக்கத்துடன் 15-3-1916ல் "காரை இளைஞர் கல்வித் தேர்ச்சிச் சங்கம்" அவ்வூர் சைவாபிமானிகளுடைய பேரார்வத்தினுல் தாபிக்கப்பட்டது. மாணவர்களுக்குச் சைவசமய அறிவு தமிழ்மொழி அறிவு என்பன விருத்தியுண்டாகும் வண்ணம் இச்சங்கம் தொண்டாற்றிவந்தது 21-12-1918ம் ஆண்டு இச்சங்கத்தின் பெயரைக் 'காரை இந்துவாலிபர்சங்கம்' என மாற்றப்பட்டது. இச்சங்க உறுப்பினருடைய ஊக்கத்தினுலும் பெருமுயற்சியினுலும் இச்சங்கத்துக்கு ஒரு சொந்தக் கட்டடம் ஆரம்பிக்கப்பட்டு, 1921-ம் ஆண்டு ஏப்ரில்மாதத்தில் கட்டடப் பிரவேசம் நிகழ்ந்தது. அக் கட்டடத்தில் ஒரு நூல்நிலையமும், சமயவகுப்புகளும் சமயப்பிரசங்கங்களும், புராணபடனம் முதலிய சற்கருமங்களும் நடந்துவந்தன

14-12-1924-ல் ஸேர் வை. துரைச்சாமி அவர்கள் தலைமையில் நிகழ்ந்த வருடாந்தக் கூட்டத்தில் உயர்திரு சுவாமி விபுலானந்தர் அவர்கள் விருப்பத்தின்படி 'இந்துவாலிபர் சங்கம் என்ற பெயர், "சைவமகாசபை" என மாற்றப்பட்டது. இச்சபை தொடர்ந்து சிறந்த தொண்டு புரிகின்றது. நமது நாட்டில் எத்தனையோ சபைகள தோன்றிச் சொற்பகாலம் தொண்டாற்றி மறைந்து விட்டன. இச்சபைக்கும் அக்கதி நேராது 52 வருடகாலம் தொண்டாற்றி வருவது காரைநகர் மக்களின் சைவாபிமானத்துக்கும் தமிழ் மொழிப் பற்றுக்கும் ஒரு சிறந்த சான்ருகும்.

இம்மலரின முகப்பில் கூத்தப் பெருமானின் திருவுருவம் பல வர்ணங்களுடன் பதிக்கப்பட்டிருக்கின்றது. சிவகாமியம்மையாருடைய திருவுருவத்தையும் மதிற் சேர்த்திருத்தல் நன்று. காரைநகரில் பண்டைக்காலந்தொடக்கம் சைவ சமய அபிவிருத்திக்கும் தமிழ் மொழி ஆக்கத்திற்கும் பணி புரிந்த பெரியார்களின் உருவப் படங்களும் வரலாறுகளும் பிரசுரிக்கப் பட்டமை

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

அணிந்துரை அரங்கம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் பாராட்டிற்குரியது. சைவ சமய முதல நூல்களாகிய வேத சிவாகமங்கள் சைவத தெய்வத்திருமுறைகள் என்பனபற்றி எழுதி உதவியுள்ளார்கள். சைவசமய உண்மைகளையும் சைவசாதனங்களையும் சைவ மக்கள் கற்று உணர்வதற்கு அக் கட்டுரைகள் பேருதவிபுரியும்.

தருமைபாதீனத்தலைவர் மதுரைத் திருஞானசம்பந்தராதீனத் தலைவர் 'ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத் குரு அவர்கள் நல்லை மதுரைத் திருஞானசம்பந்த ராதீனத் தலைவர் ஸ்ரீ மத் இராஜகோபாலச்சாரியார் முதலியவர்கள் ஆசியுரைவழங்கியுள்ளார்கள். ஈழத்துத் தவ முனிவர் யோகர் சுவாமிகள், என்னும் மகுடங்கொண்ட கட்டுரையுடன் மலர் ஆரம்பமாகிறது. யாவருக்கும் இம் மலர் ஞானக் கருவூலம், தேனீக்கள் பல மலர்களிலுமிருந்து தேனை ஒரு தேன்வதையில் சேர்ப்பது போல மலராசிரியர் பல அறிஞர்களுடைய கருத்துக்களைப் பெற்று இம் மலர் மூலம் சைவ உலகுக்கு வழங்கியுள்ளார். தமிழபிமானிகளும் சைவாபிமானிகளும் இம்மலரை விலைக் குப் பெற்றுக் காரைநகர் சைவ மகா சபையினது சமயத தொண்டினை ஆதரித்து இறைவன் திருவருளையும் பெறுவார்களாக. ——

நூல் வெளியீடு

தருமபுரம் ஆதீனம் ௨௫ ஆவது மகா சந்நிதானம் அவர்கள் சென்னையில் 2 ஆவது உலகத் தமிழ் மகாநாடு நிறைவு நாள் அன்று (மார்கழி 26 நாள்) மாலை பூம்புகார் நகரில் ஆதீனத்தின் சார்பாக ஸ்ரீமத சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகளைக் கொண்டு தமிழில் 'சித்தாந்தத் தெளிவு'' என்ற நூலையும், ஆங்கிலத்தில் "சைவ சித்தாந்தா'' என்ற நூலையும் வெளியிட்டு உலகப் பிரதிநிதிகளுக்கு அன்பளிப்பு செய்துவைத்தார்கள்.

2 ஆவது உலகத் தமிழ் மகா நாட்டை சிறப்பான முறையில் நடத்திவைத்துள்ள தமிழக அரசு முதல அமைச்சர் அண்ணாதுரை அவர்களுக்கும் பொதுப்பணித்துறை அமச்சர் மு. கருணாநிதி அவர்களுக்கும், அறநிலைய அமைச்சா இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கும் ஆதீனத்தின் சார்பாகப் பொன்னாடைகள் போர்த்தப்பட்டு ஸ்ரீ ல ஸ்ரீ கயிலை குருமணிகளால் ஆசியுரைகள் வழங்கப் பட்டன.

சமாச்சாரம்

ஆண்பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் மேல் வகுப்புகளில் சேர்ந்து கல்வி பயில்வது கலாசாரத்துக்கு முரணானதெனக் கல்வி மந்திரி திரு: ஐ. எம். ஆர். ஏ. ஈரியகொல்ல கருதுகின்றனர். எனவே கூட்டுக்கல்வி முறையைக் கூடியவரை அரசினர் பாடசாலைகளில் தவிர்க்க கல்வி அமைச்சர் எண்ணியுள்ளனர் ஒன்றுக்கு மேற்பட்ட மகாவித்தியாலயங்கள் உள்ள இடங்களில் உள்ள பாடசாலைகளை ஆண் பாடசாலையாகவும், பெண் பாடசாலையாகவும் பிரிப்பதன்மூலம் இக் கொள்கையைச் சாதிக்கமுடியும் எனவுங் கருதுகின்றனர்.

ஆய்வுகூட வசதிகளைப் பெற முடியாத இடங்களில் இவ்விதம் பிரிக்கப்படுதல் கஷ்டமாகுமெனவும் மந்திரி கருதுகின்றனர்.

பிலவங்க ஞூ

தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்தரம்

அகில இலங்கைச் சைவானுட்டான பாதுகாப்புச் சபையின் நிர்வாகசபைக்குழு, அகில இலங்கை வேதாகம சைவசித்தாந்தசபை நிர்வாகக் குழுவுடன், அகில இலங்கைச் சைவாலயதர்மகர்த்தாக்களின் நிர்வாகசபைக் குழுவுடனும் சேர்ந்து நிகழ்த்திய ஆலோசனைக் கூட்டத்தில பின்வரும் தீர்மானம் ஏக மனதாக நிறைவேற்றப் பட்டுள்ளது

எதிர் வரும தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்தரம் என்னும் புண்ணிய தினங்களை நிர்ணயிக்கும் பொழுது இந்தியாவில் இத் தினங்களுக்கு முக்கியத்துவம பெற்ற தலங்களாகிய சிதம்பரம், கும்ப கோணம், என்னுந் தலங்கள் கைக் கொள்ளும் தினத்தை முறையே அனுசரித்து வேத சிவாகம விரோதமில்லாத வகையில் அத்தினங்களை நிர்ணயிக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப் பட்ட திகதிகளை, நமது சைவாலயங்கள் அனைத்தும் தம்முட் பேதமின்றி ஒருமுகமாக அனுசரித்து ஒழுக வேண்டுமென்றும் இச் சபை தீர்மானிக்கின்றது

இதற் கிணங்க இவ் வருடத்தில் இத்தினங்களை நிர்ணயிக்கப் பட்ட திகதிகள் வருமாறு:-

தைப்பூசம்	—	தை மீ	29	(12-2-68)
மாசி மகம	—	மாசி மீ	30	(13-3-68)
பங்குனி உத்தரம்	—	பங்குனி மீ	29	(11-4-68)

சைவ சித்தாந்த மகா ஜமா சத்தின்
62- வது மகா நாடு

["இந்துசாதனம்'' அபிமான நிருபர்
கு. மா. பாலசுப்பிரமணியம்அவர்கள் சிதம்பரம், தென்னிந்தியா]

தென்னிந்தியாவில் ஆதி சிதம்பரம எனப்புகழ்பெற்று வரும் 'திருவெணகாடு'' தலத்தில், "சைவசித்தாந்த மகா சமாஜ'' த்தாரின் 62 ஆவது மகாநாடு மார்கழி 14, 15 16 திகதிகளில் சிறப்புடன் நடைபெற்றது.

பலபகுதிகளிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

14ம் தேதி காலை ஸ்ரீ சுவேதாரணியேசுரர் தேவஸ்தானத்தில் வழிபாடுகள் நடைபெற்று மகாநாடு ஆரம்பமாகியது.

திரிச்சிராப்பள்ளி சைவப் பெரியார் "திருக்குறள்வேள்'' திரு. கு வரதராஜப்பிள்ளை அவர்கள் சமாஜத்தாரின் கொடியையுயர்த்திவைத்தார் ஸ்ரீ சுவேதாரணியேசுரர் தேவஸ்தான அறங்காவலரும மகாநாட்டின் வரவேற்புக் குழுவின் தலைவருமான திருக்கடவூர் பிச்சக்கட்டளை எஸ் ஸ்டேட் அதிபர் உயர்திரு கே கனகசபைபிள்ளை வரவேற்புரை கூறுகையில் சமாஜத்தாரின் நற்பணிகளைப் பெரிதும் பாராட்டினர்.

சமாஜத்தின் செயலாளர் சமாஜத்தின் ஆண்டு அறிக்கையை வாசித்தார்.

'திருவெம்பாவை உரைநடை நூல் மகாநாட்டில் திரு கி. இராமலிங்கம்வெளியிட்டார்.

மறைத்திரு மாணிக்கவாசக ஞானதேசிக சுவாமிகள் 62 ஆவது மகாநாட்டிற்குத் தலைமை தாங்கி தலைமை உரை நிகழ்த்தினார்கள்.

தென்னிந்தியாவில் ஆதி சிதம்பரம் எனப்புகழ்பெற்று விளங்கும திருவெண்காடு தலத்தில சைவசித்தாந்த மகா சமாஜத்தின் 62 ஆவது மகா நாட்டில் 15-ம் தேதியன்று சைவமங்கையர் மகாநாடு திருமதி இந்திரா சோமசுந்தரம் எம். ஏ. அவர்கள் தலைமையில் நடைபெறறது.

16 ம் தேதியன்று சைவ இளைஞர் மகாநாட்டிற்கு சென்னை கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியின் முதல்வரான பேராசிரியர் உயர்திரு கு ஆளுடையபிள்ளை அவர்கள் (மறைமலை அடிகளாரின் பேரன்) தலைமைதாங்கிப் பேருரை வழங்கினர்.

பண்ணுறு பாயும்

பத்தர் : "யாழ்ப்பாணத்துக்கு நல்லகாலம் பிறக்கவிருக்குது சித்தர் அண்ணே!

சித்தர் : "ஏன் அந்தமாதிரிச் சொல்லுறியள்? ஓகோ ஓ! 'தை' பிறந்தால நல்ல வழி பிறக்கும என்பது பொய்க்குமா? 'வேட்டு வேளாண்மைக்காலம்' என்பதைநினைச்சுக் கூறினீரோ? அல்லது, வடபகுதிக்கு முப்பதாயிரமோ என்னவோ 'நேஸ்றபரே பாமாவ' வரவிருக்குதாம் எதைக் கருதிக் கூறினியள்.... ?

பத்தர் : அந்த நினைவொன்றும் வரவில்லை! 'தாயகத்தைச் சார்ந்த மெய்கண்டாராதீனத்து 'தேவாரத்திருமுறை இசைமணி' இராஜேஸ்வரன் யாழ் வருகிறாராம! இங்கேயே தங்கியிருந்து பண் பயிற்சி வகுப்புகள் தொடர்ந்து நிகழப்போகுது! பண்ணுறு பெருக்கெடுக்கப் போகுது ... !

சித்தர் : "உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டுடன் நல்லகாலம் தோன்றித்தானிருக்குது! இந்த அரிய தருணத்தை முறையாகப் பயன்படுத்த வேண்டுமே! திருமுறை பயிற்சிக்கு முழுநேரப் பாடசாலைகள வேண்டுமே! எதிர் காலத்தை இப்பவே வளம்படுத்த எவமவர் முன்வருவார்களா ?

பத்தர் : நல்லதைச் செய்ய நம மவாபின்னிற்பலார்! நாவலர்க்குச் சிலையெடுக்கமுன்னம் செய்ய வேண்டிய நல்லபணி! நாவலர் பெருமையை நாம் உணர்ந்தால் நம் நிலை இன்று இப்படியாகுமா? நாவலரை அறியாதவர்கள் நம் பண்டிதர் ஐயாவின் 'நாவலர்' சரிதத்தைப் படிக்கவேணும்!

" நாயன்மார் - நாதன் "

சிவ மானஸ பூஜை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சத்ரம் சாமரயோர் யுகம் வ்யஜநகம்
 சாதர் ஸகம் நிர்மலம்
வீணாபேரி ம்ருதங்க காஹல கலா
 கீதஞ்ச ந்ருத்யந் ததா
ஸாஷ்டாங்கம் ப்ரணத : ஸ்துதிர் பஹுவிதா
 பயேதத் ஸமஸ்தம மயா
ஸங்கல் பேந ஸமர்பிதம் தவ விபோ
 பூஜாம் க்ருஹாண ப்ரபோ.

கவினுறு குடையும் கவரியி னிணையும்
 களிதரு சிவிறிகண் ணாடி
செவியிசை வீணை பேரிமத் தளமும்
 சேருமெக காளமின் னிசையும்
சவியுறு நிருத்தம் காடலை வணக்கம்
 சாற்று தோத் திரமிவை யாவும்
சிவமுழு முதல்வ மனத்திலர்ப் பணித்தேன்
 செவ்விதின் ஏற்றருளுகவே. (3)

ஆத்மாத்வம் கிரிஜாமதி : ஸஹசரா :
 ப்ராணா : சரீரம் க்ருஹம்
பூஜாதே வ்ஷயோப போகரசநா
 நித்ரா ஸமாதிஸ் திதி :
ஸஞ்சார : பதயோ : ப்ரதட்சிண விதி :
 ஸ்தோத்ராணி ஸர்வா கிர :
யத்யத் கர்ம கரோமி தத்தகிலம்
 சம்போ தவா ராதநம்.

ஆவிநீ புத்தி மலைமகள் மூச்சே
 ஆர்வலர் என்னுடல் வீடு
மேவுமென் நுகர்ச்சி யாவுநின் பூசை
 விரவுச மாதிநித் திரையே
ஓவிலா நடையும் நின்வலம் வரலே
 உரையெலாம் உனதுதோத் திரமாம்
தாவிலெச் செயல்கள் செயுமவை யாவும்
 தலைவநின் அடிதொழல் அன்றே! (4)
கரசரண க்ருதர்வா கர்மவாக்காய ஜம்வா
ச்ரவண நயந ஜவா மாநஸவா பராதம்
விஹிதம் அவிஹிதம்வா ஸர்வமேதத்க்ஷமஸ்வ
சிவ சிவ கருணப்தே ஸ்ரீமஹா தேவசம்போ. (5)

(அறுசீர் விருத்தம்)

நவையகல் கையாற் காலால் நவில் செயல் வாக்கே
 காயம்
கவர்தரு செவியற் கண்ணற் கருத்திலாய குற்றம்
அவமிலா விதி விலக்கே அல்லன பொறுத்தருள்வாய்
சிவ சிவ கருணை வள்ளால் சம்புவே சீர்மா தேவே

* * *

கோட்டு விற்பனவு விளம்பரம்

1, A சண்முகம் கதையாவும் 2, பெண் சேதுப்பிள்ளையும்
காரைநகர் கிழக்கு —பதில் வழக்காளிகள்

இல. M. B 5334 எதிராக

1. குழந்தைவேலு கதிரவேலுவும் பெண் 2. சிவயோகமும்
280, நாவலர் வீதி, யாழ்ப்பாணம், —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 5334 -ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னூல் விபரிக்கப்படும் துண்டுக் காணியை 1968 ம் ஞூ தை மீ 25-ந் வியாழக் கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத தொகை:- முதல் வட்டி ரூபாய் 16135-ம் 29-11-66 தொடக்கம் முழுத்தொகைசகும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 128/94-ம் கொமிஷன் முதகிரை ரூபா 42/-ம்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணம் மாநகரசபையின் 14-ம வட்டாரம், வண்ணை பண்ணை தென் கிழக்கு இறை வா றை இலக்கம் 380 நவலர் வீதி "மாவடி இலகடி சப்புநாதன் தறை'' வில. பர, 4 குளி 4, 5/0 அல்லது நா 1 பேச்செல் 3. 2. சட்டிடங்களும். இது 1960-ம் ஆண்டு மார்கழி மாதம் 19-ந் திகதி உத்தரவு பெற்ற உலாந்தா திரு: எஸ் ஏகாம்பரம் அவர்களால் தயாரிக்கப்பட்ட படத்தின் இலக்கம் 951-ல் மூலல ம் துண்டாகக் குறிக்கப்பட்டுள்ளது இதன் எல்லை:- வடகிழக்கு நாவலர் வீதி, தென்கிழக்கு செல்லம் துரையப்பாவினுதனம், தென் மேற்கு முருகேசு இராமநாதியினுதனம். வடமேற்கு முருகேசு நாகலிங்கத்தினுதனம். இதடங்கலும் இது தாய் உறுதிகளின்படி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோயிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கு இறை "மாவடி இலகடி சம்புநாதன் தறை'' வில. பர. 3 குளி 16, 1/8 எல்லை: — கிழக்கு செல்லம துரையப்பாவின் ஆதனம். வடக்கு றோட்டு மேற்கு முருகேசு நாகலிங்கத்தினுதனம். தெற்கு முருகேசு இராமநாதியினுதனம் இது யாழ்ப்பாணம் காணிப் பதிவுக்கந்தோரில் D. 221/147-ம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

22, கோவில் வீதி, நீ. அன்ரனிப்பிள்ளை,
யாழ்ப்பாணம். கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்
எம். 380, 19-1—

கோட்டு விற்பனவு விளம்பரம்

வேலாயுதம் கைம்பெண் செல்வராணி, உரும்பராய்
இல.4345 A. எதிராக —வழக்காளி
நாகமுத்து பொன்னையா, காலஞ்சென்ற உரும்பராய் அப்புக்குட்டி நாகமுத்துவின் சட்டபூர்வமான பிரதிநிதி,
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்றிக்ட் கோட்டின் 4345.A-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 3 துண்டுக்காணிகள் 1968-ம் ௵ மாசி மீ 26-ந் உ திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபாய் 500-00-ம் 21-7-64 தொடக்கம் 7-11-65 வரைக்கும் ரூபாய் 250-00-க்கு 11 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியுக் கோட்டுச் செலவு ரூபாய் 54/25.

ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக், வலிகாமம் கிழக்குக் கோப்பாய் கோவிற்பற்று உரும்பராய் இறை "குப்பிளான் குலங்கரையும், குலங்கரை சோகை வளவும்" கிலப்பரப்பு 73½ யும் செய்பயிர் வான்பயிர்களும், பனைகளும். இதற்கு எல்லை:- கிழக்கு அப்புக்குட்டி வயிரமுத்துவிற்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் வடக்கு இளையதம்பி பெண் தில்லைநாயகத்திற்கும், கார்த்திகேசு பெண் சின்னச்சிக்கும், முருகேசு ஐயம்பிள்ளைக்கும் உரிய ஆதனம் மேற்கு கந்தர் அப்புக்குட்டியின் உரிமைக்காறருக்கும் பங்காளருக்கும், முருகேசர் சுப்பிரமணியத்தின் உரிமைக்காறருக்கும் உரிய ஆதனம் தெற்கு தம்பையா பெண் பொன்னம்மாவின் உரிமைக்காறருக்கும், சுன்னத்தம்பி கைம்பெண் வள்ளியம்மைக்கும், வீரகத்தி கைம்பெண் பொன்னுவிற்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இதடங்கலும் சொரியலாய் 19/490 பங்குகள்

2. "ஷெ காலிங்கன் சீமாவும், மற துண்டுகளும்" கிலப்பரப்பு 4 குளி 12 பனைகளும் வான்பயிர் பங்குகளும், இதற்கு எல்லை:- கிழக்கு செல்லப்பா பெண் வள்ளியம்மையின் உரிமைக்காரரின் ஆதனம் வடக்கு வீரகத்தி பெண் பொன்னுவின் உரிமைக்காறருக்கும், செல்லப்பா பெண் வள்ளியம்மையின் உரிமைக்காறருக்குமுரிய ஆதனம். மேற்கு தம்பையா பெண் பொன்னம்மாவின் உரிமைக்காரரின் ஆதனம். தெற்கு சின்னத்தம்பி பெண் வள்ளிப்பிள்ளையின் உரிமைக்காரருக்கும், கந்தன் மாணிக்கனின் உரிமைக்காரருக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இதடங்கலும் சொரியலாய் 1/5 பங்கு,

3. ஷெ "மாயகைப்புலம்" கிலப்பரப்பு 10¾ வடக்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் உரித்தும் இதற்கு எல்லை கிழக்கு மணியன் வேலனின் உரிமைக்காரருக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம். வடக்கு மணியன் சின்னத்தம்பிக்கும் பங்காளருக்கும் கந்தர் வீரகத்தியின் உரிமைக்காரருக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம். மேற்கு சின்னத்தம்பி பெண் பொன்னம்மாவின் உரிமைக்காரருக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம். தெற்கு வேலுப்பிள்ளை பெண் இராசம்மாவிற்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம். இதடங்கலும் சொரியலாய் 1/10 பங்கு.

கா. தர்மலிங்கம்
உரும்பராய், 22-12-67, கொம்மிஷனர் விலைமதிப்பாளர்.
எம். 375 19-1-68

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

யாழ்ப்பாணம் நாவலர் வீதி டாக்டர் கனகசபை கந்தையாவின் புத்திரி பதமாவதி —வழக்காளி
இல: M. B. 6796 எதிராக
1, யாழ்ப்பாணம் ஈச்சமொட்டை சுந்தரம்பிள்ளை சிவராசா
2. யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி மயில்வாகனம் பொன்னுத்துரையும்
3. பெண் செல்லக்கண்ணுவும்,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 6796-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1968-ம் வருடம் மாசி மாதம் 19 உ திங்கட்கிழமை பிற்பகல் 4-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல்வட்டி ரூபா 34025-ம் 8-7-64 தொடக்கம் 11-3-65 வரைக்கும் ரூபா 25,000-க்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 477-50 சதம், இக்கோட்டுச் செலவில் ரூபா 100/- கொடுபட்டிருக்கிறது,

ஆதன விபரம

பிரிவிடுதல் செய்யப்பட்ட காணி பரப்பு 16 குளி 13 A லாசதஸ் உத்தரவு பெற்ற உலாந்தாவால் 9-9-59-ல் 2025 C. நம்பர் படத்தில் காட்டப்பட்டிருக்கிறபடி இக் காணி ஆடலடியிற்புலமும் மறு பிரிவுகளும், அடலயடியின் வளவும். ஆடலடியிற் புலமும், சுடலையடியிற புலமும், மறு பிரிவுகளும், சுடலையடியிற் வளவு, சுடலையடியிற் புலமும், என்றழைக்கப்படும் இக் காணி கிலப்பரப்பு 30 இக்காணி,

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவில்பற்று சிவியாதெரு இறை. மேற் கூறியபடி பிரிவிடுதல் செய்யப்பட்ட இக் காணியின் கிலப்பரப்பு 16-ம் குளி 18-ம் வீடும், கிணறும், செய்பயிர் வான்பயிர்களும் மற்றும் அதைச் சேர்ந்தவைகளும், மேற்கெல்லையில் இருக்கும் கிணற்றில் பங்கும், இதற்கு எல்லை கிழக்கு அமிர்தலிங்கத்துக்கும் மனைவிக்கும் P. சின்னத்தம்பிக்கும், K. இரத்தினத்திற்கும், K. சரவணமுத்துவுக்கும், உரிய ஆதனம. வடக்கு V நமசிவாயத்திற்கும், மனைவிக்கும் M. M. தம்பிராசாவுக்கும் உரிய ஆதனம், மேற்கு றோட்டுக்குப் போகும் பாதையும் P. நவரத்தினத்திற்கும் மனைவிக்கும், S. சிவராசாவுக்கும் உரிய ஆதனம். தெற்கு K. தம்பையாவுக்கும், K பஞ்சாட்சரத்திற்கும் மனைவிக்கும், S. மைக்கேல்பிள்ளைக்கும் உரிய ஆதனங்கள். பதிவு இலக்கம். D. 271/272.

16, A அம்மன் றோட்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்
அ. ஜெகநாதன்
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
M. 376 19-1-68

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்.

நினைவுத் திரையில்:

சாதனப்பிரியர்களே!

இத் தலையங்கத்துடன் 1916-ம் ஆண்டு ஜனவரி 6-ந் தேதி பிரசுரமான இந்துசாதனம் இதழில் வ. மு. இரத்தினேஸ்வர ஐயர் தமிழ்ப்பண்டிதர் ஞானப்பிரகாச சபை, பதுவயல், இந்தியா, 1., என்ற விலாசத்துடன் ஒரு கடிதம் வெளி வந்தது. அதன் இறுதிப் பாகத்தைக் கீழே தருகின்றோம்.

x x x

உபசங்காரம்

அன்பர்களே! இதுவரையினும் கூறிப் போந்தவற்றுளே தியானமாவது இது என்பதூஉவும், தியானிக்கப்படுபவர் இவர் என்பதூஉம் தியானிப்போன் இவன் என்பதூவும், தியானப்பேறு ஆநந்தமே யென்பதூஉவும், ஆநந்தத்தின் மேலாயதுமின் றென்பதூஉம், இவ்வுண்மைகளை யுணர்ந்து சிவஞான சாதனமான தியானத்தை வழுவறப் புரிந்து மோக்ஷம் பெற வேண்டி வேண்டுவார்க் கியுப் விமலனை யுபாசிக்க வேண்டும் என்பதூஉவும்; இவற்றை அங்ஙனம் உபாசிப்பார்க்குச் சுழுமுனாநாடி ஸ்தானம் உன்னதஸ்தானமாகும் என்பதூஉம் இவற்றையே யாவரும் பெறப் பிரார்த்தநத லாவசியகமாகும், என்பதூஉம் சரியா பாதம், கிரியாபாதங்களிலுள்ள செயல்களைத் தவறுது செய்துவருதல் வேண்டும் என்பதூஉம், பிறவும் சுருக்கி விளக்கப் பெற்றவாறுணர்க. அன்றி தியாகாநந்தன் திகழுமிடம் எது என்பதற்கு இராப் பகலற்றவிடம் என்பது.

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 5451/A.
ஐயம்பிள்ளை தளையசிங்கப்
உரும்பிராய், —வழக்காளி
எதிராக
1 வைத்திலிங்கம் கந்தையா பெண் 2 நாகேஸ்வரி இருவரும் இணுவில் எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 5451/A-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி, 1968-ம் ஆ பங்குனி மீ 8-ந் உ வெள்ளிக் கிழமை (8-3-68) பிற்பகல் 2 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: — முதல் வட்டி ரூபாய் 745/20-ம் 7-2-67 தொடக்கம் 3-11-67 வரைக்கும் 500-க்கு 11% வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 56/25.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு உடுவில் கோயிற்பற்று இணுவில் இறை 'மாத்தம்பன்" என்னுங் காணி கி. ப. 5, தென்கிழக்கு மூலையிலிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கு உருத்தும் வழி வாய்க்கால், குந்தரம், துலா, ஆடுகால், இவை எல்லாவற்றிலும் உருத்தும், தூரவையில் நிற்கும் தென்னைமரங்களில் ஒன்றில் உரித்தும் உண்டு, எல்லை: கிழக்கும் தெற்கும் கதிரவேலு வைத்திலிங்கத்தின் ஆதனமும் வடக்கு இளையதம்பி நன்னித்தம்பி, வேலுப்பிள்ளை நன்னித்தம்பியும் பங்காளர்களின் ஆதனங்களும் மேற்கு ஆறுமுகத்தின் மகள் சரஸ்வதியும் அவரின் சகோதரிகளின் ஆதனங்களும் உண்டு.

இ. கனகரெத்தினம்,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
நப். 35 2 கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்,
எம். 379 19-1-) 9 1-68,

கோட்டு விற்பனவு விளம்பரம்

அம்பலவாணர் இராமலிங்கம் காரைதீவு மேற்கு
எதிராக —வழக்காளி
வழக்கு இல. M B 7279
காசிநாதர் கார்த்திகேசு கைம்பெண் சின்னக்குட்டி காரைதீவு மேற்கு — இறந்தவர்
காலஞ்சென்ற காசிநாதர் கார்த்திகேசு கைம்பெண் சின்னக்குட்டியின் ஆதனங்களுக்கு சட்டபூர்வமான பிரதிநிதி K கனகரட்ணம் கைம்பெண் செல்லம்மா —காரைதீவுமேற்கு —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 7279-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக் காணியை 1968-ம் ௵ மாசி மீ 28 உ புதன்கிழமை முற்பகல் 12-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபா 1209-ம் 8-3-65 தொடக்கம் 17-5-67 வரைக்கும் ரூபா 1000-க்கு 9 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதவட்டியும் கோட்டுச் செலவு ரூபா 385 09.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவு கோயிற்பற்று தங்கோடை இறை "காஞ்சோன்றியம்புலம்" கில பா. 12 பனைகளும் வடலிகளும் வான் பயிர்களும் எல்லை கிழக்கு ஒழுங்கை முகப்பும் எதிராளியின் ஆதனமும். வடக்கு கனகசபை தில்லையம்பலத்தின் ஆதனம், மேற்கு சங்கரப்பிள்ளை ஆறுமுகத்தின் ஆதனம். தெற்கு சங்கரப்பிள்ளை ஆறுமுகத்துக்கும் சின்னையா பெண் தெய்வானைக்குமுரிய ஆதனங்கள். இதடங்கலும். பதிவு எண் C 197/179 C, 365/45 க்கு தொடரப்பட்டுள்ளது.

14, டேவிட் வீதி
யாழ்ப்பாணம்
6-1-68,
அ. போ. எதிர்மனசிங்கி
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
எம் 378, 19-1-68)

கோட்டு விற்பனவு விளம்பரம்

நாகலிங்கம் கைம்பெண் விசாலாட்சி கொட்டடி யாழ்ப்பாணம்
வழக்கு, இலக்கம்: M. B 3634 —வழக்காளி
எதிராக
நாகநாதி சிதம்பரப்பிள்ளையும் பெண் பொன்னம்மாவும்
தெல்லிப்பழை கிழக்கு தெல்லிப்பழை — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3634-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1968 ம் ௵ மாசி மீ 5-ந் திகதி திங்கட்கிழமை (5-2-68) பிற்பகல் 3-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 3500-ம் 2-9-60 தொடக்கம் 15-2-61 வரைக்கும் ரூபா 3000-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 482-90. இதில் வட்டியால் 3-5-63ல் 500/— ரூபாவும் 12-6-64 ல் 500 ரூபாவும் கோட்டுச்செலவால் 125/— ரூபாவும் கொடுபட்டுள்ளது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழை கோயிற்பற்று தெல்லிப்பழை கிழக்குஇறை "இளாலை" கில பர 10 இதில் மேற்குப் புறமாக விற்ற கிலப்பரப்பு 3-ம் நீக்கி மிகுதி கில பர 7ம் அதற்குச் சேர்ந்தவைகளும். இந்த பர 7 க்கும் எல்லை கிழக்கு, வடக்கு, தெற்கு ஒழுங்கை மேற்கு இதன் மிகுதி ஆதனம். இந்த கில பர 7-ம் H 321 99-ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பெருங்காடு,
புங்குடுதீவு
29—11—67.
இ. சு. தர்மரத்தினம்
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
எம் 377, 19—1—68)

யாழ்ப்பாணம்
ஐக்கிய இலாப நிதி
1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 7 விகிதமும் 9 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை J P.
சிருப்பர்.
Std. 14

மலரயனுந் திருமாலுங் காணாமை மதிமயங்கப்
புலிமுனியும் பதஞ்சலியுங் கண்டுதொழப் புரிசடையார்
குலவுநடந் தருந்தில்லைக் குடதிசைக் கோபுரவாயில்
நிலவிய கற்பகக்கன்றி னிறைமலர்த்தா ளிணைபோற்றி

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், பிரம்மஸ்ரீ க. செ. பாலசுப்பிரமணியஐயர் புன்னாலைக்கட்டுவன், சுன்னாகம் அவர்களால், 19—1—1968 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்,